# பொதுப்பணித்துறை
# நீர்வள ஆதாரத்துறை

# திட்டச் சாதனை
# 2016 – 2017

**©**
**தமிழ்நாடு அரசு**
**2017**

# பொதுப்பணித்துறை
# நீர்வள ஆதாரத்துறை

## 1.0. பொது

நாட்டின் கடைக்கோடியில் அமைந்துள்ள நீர்ப்பற்றாக்குறை மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதால் பெருகிவரும் நீர்த்தேவையினை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. குறைந்தபட்ச நீர் ஆதாரங்கள், நிச்சயமற்ற பருவகால மழை, நிலத்தடி நீர் பயன்பாடு, பல்வேறு பயன்பாடுகளுக்காக அதிகரித்துள்ள நீர்த்தேவை மற்றும் நீர் ஆதாரங்களை சார்ந்துள்ள வேளாண் பெருமக்களின் நலன்களைக் காத்தல் ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன. அரசு இத்தகைய சூழல்களை கூர்ந்து கண்காணித்து, பன்மாநில நதிநீர்ப் பிரச்சனைகளை கையாளுதல், புதிய பாசன வசதிகளை சாத்தியமுள்ள இடங்களில் அமைத்தல், பயன்பாட்டிலுள்ள பாசன உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்தி மேம்படுத்துதல் மற்றும் புனரமைத்தல் மற்றும் நீர்நிலைகளை தூர்வாரி மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றி அவற்றின் கொள்ளளவை மீளப்பெறுதல் போன்ற தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மேலும், நிலத்தடி நீர் தொடர்பான, கால முறை பன்னோக்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கென மாநில அளவிலான வலையமைப்பு நிறுவி, நிலத்தடி நீர் மற்றும் மேற்பரப்பு நீர் இருப்பு, நீரின் தரம் ஆகியவற்றை கண்காணித்து, நுண்ணிய அளவிலான நிலத்தடி நீர்வள ஆதாரம் கணக்கிடப்பட்டு, வருவாய் குறுவட்ட அளவில் வகைப்படுத்தப்படுகிறது.

## 2.0. 2016–2017–ஆம் ஆண்டுக்கான திட்ட செயல்பாடுகள்


2016–2017 ஆம் ஆண்டின் நிதிச் சாதனை, நிறைவேற்றப்பட்ட / முன்னேற்றத்தில் உள்ள திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளின் விவரம் பின்வருமாறு :


**(ரூபாய் கோடியில்)**


| திட்டத்தின் தலைப்பு | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு (2016–2017) | திருத்திய திட்ட ஒதுக்கீடு (2016–2017) | செலவினம் |
|---|---|---|---|
| I திட்டம் | | | |
| மாநில நிதித் திட்டங்கள் | 610.31 | 511.09 | 292.45 |
| நீர்வள நிலவளத் திட்டம் | 10.01 | 18.12 | 14.83 |
| மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை | 1.51 | 0.88 | 0.21 |
| நபார்டு கடனுதவித் திட்டங்கள் | 545.75 | 662.45 | 480.14 |
| தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் | 0.00 | 0.44 | 0.44 |

| | | | |
|---|---|---|---|
| அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் | 255.01 | 197.30 | 138.36 |
| மாநில மேலாண்மை பிரிவு (பணியமைப்பு) | 3.45 | 4.64 | 3.33 |
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புக் குழுமத் திட்டம் | 0.00 | 16.45 | 12.88 |
| 13வது நிதிக்குழுவின் மானிய நிதியுதவித் திட்டம் | 0.00 | 20.72 | 17.66 |
| மத்திய மாநில அரசு பங்களிப்புத் திட்டங்கள் (AIBP & RRR) | 22.00 | 38.27 | 31.38 |
| மாநில நதிகள் இணைப்புத் திட்டம் | 205.89 | 55.89 | 0.33 |
| நிலத்தடி நீர் அளவை மற்றும் திறந்தவெளி கிணறுகள் | 3.12 | 0.00 | 0.00 |
| **மொத்தம் (திட்டப் பணிகள்)** | **1657.03** | **1526.25** | **992.01** |
| பன்முக குழுமம் (பணியமைப்பு ) | 2.69 | 2.35 | 1.54 |
| **மொத்தம் (திட்டப் பணிகள் மற்றும் பணியமைப்பு)** | **1659.72** | **1528.60** | **993.55** |
| II **திட்டம் சாராதது** | | | |
| முறை சார்ந்த பாசன அமைப்பு பராமரிப்பு | 176.79 | 35.39 | 133.33 |
| முறை சாரா பாசன அமைப்பு பராமரிப்பு | 49.21 | 4.76 | 36.26 |
| மாநகர குடிநீர் வழங்குதல் –பராமரிப்பு | 0.54 | 0.54 | 0.54 |
| இதர பராமரிப்பு | 0.84 | 0.84 | 0.81 |
| மணல் குவாரி | 15.30 | 15.30 | 15.26 |
| **மொத்தம் (திட்டம் சாராப் பணிகள்)** | **242.68** | **56.83** | **186.20** |
| **மொத்தம் (திட்டம் மற்றும் திட்டம் சாராப் பணிகள்)** | **1902.40** | **1585.43** | **1179.75** |

## கோரிக்கை எண்.40–இல் ஒப்பளிக்கப்பட்ட நிதி இனங்கள்






**திருத்திய வரவு செலவு திட்ட ஒதுக்கீடு (2016–2017)**    **திருத்திய திட்ட ஒதுக்கீடு (2016–2017)**    **செலவினம்**

## 3.0. புதிய பாசன உள்கட்டமைப்புகளை உருவாக்குதல்

### 3.1. புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்குதல்

**நடைபெற்று வரும் பணிகள்**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், சிக்கலப்பள்ளி கிராமத்தின் அருகே உள்ள வானியோடில் பெண்ணையாற்றின் குறுக்கே சின்னாறு சேருமிடத்தில் சூளகிரி சின்னாறு நீர்த்தேக்கம் அமைக்க விரிவான ஆய்வுப் பணிகள் ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை கிராமம், மருதையாற்றின் குறுக்கே ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி ரூ.124.20 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. 45 சதவிகிதப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கண்ணன்கோட்டை இசா இராஜனேரி மற்றும் தேர்வாய்கண்டிகை ஏரிகளை இணைத்து கண்ணன்கோட்டை கிராமத்தில் ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி ரூ.330.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. 60 சதவிகிதப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

### 3.2. புதிய கதவணை அமைத்தல்

கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில், ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களின் அருகே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரூ.400.00 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய கதவணை அமைக்கும் திட்டத்திற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கை பரிசீலனையில் உள்ளது.

### 3.3. புதிய அணைக்கட்டுகள் மற்றும் நீரொழுங்கிகள்

**நிறைவடைந்துள்ள பணிகள்**

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம் மற்றும் கிராமத்திலுள்ள திருமணிமுத்தாற்றின் குறுக்கே ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் அஞ்சனக்காரன்குளம் அணைக்கட்டினை மறு கட்டுமானம் செய்யும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 36 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கோடக்காரமூலை கிராமத்திலுள்ள நல்லூர் உப்பனார் வடிகாலின் குறுக்கே ரூ.1.78 கோடி மதிப்பீட்டில் புதிய கடைமடை நீரொழுங்கி அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 600 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், புளியந்துறை கிராமத்திலுள்ள நல்லூர் சின்னார் வடிகாலின் குறுக்கே ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் புதிய கடைமடை நீரொழுங்கி அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 400 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், அத்தியூர் கிராமத்தின் அருகே வெள்ளாற்றின் குறுக்கே ரூ.8.11 கோடி மதிப்பீட்டில் அணைக்கட்டு அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 1,205 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், ஆளப்பிறந்தான் ஏரிக்கு நீர் வழங்குவதற்கு தெற்கு வெள்ளாற்றின் குறுக்கே ரூ.7.09 கோடி மதிப்பீட்டில் அணைக்கட்டு அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 861 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், உதயாச்சி கிராமம், கல்குடி ஏரி மற்றும் அதன் தொகுப்பு ஏரிகளுக்கு நீர் வழங்க மணிமுத்தாறு ஆற்றின் குறுக்கே ரூ.10.60 கோடி மதிப்பீட்டில் அணைக்கட்டு அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 1501 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அலிவலம் கிராமத்திலுள்ள வழங்கு வாய்க்கால்களை மேம்படுத்தும் பணி மற்றும் முடத்தானி ஏரி, கொத்தமங்கலம் ஏரி மற்றும் சீத்தாம்பாள்புரம் ஏரிகளுக்கு நீர் வழங்குவதற்கு, நரியாற்றின் குறுக்கே ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் அணைக்கட்டு அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 420 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், பைங்காட்டூர் கிராமத்தில் கோரையாற்றின் குறுக்கே தொலைகல் 130.00–இல் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் புதிய நீரொழுங்கி அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 6,042 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், ஒதலவாடி ஏரிக்கு நீர் வழங்கும் பொருட்டு அரும்பாலூர் கிராமத்திற்கு அருகில் செய்யாற்றின் குறுக்கே ரூ.7.21 கோடி மதிப்பீட்டில் அணைக்கட்டு அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 426 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

## 3.4. புதிய தடுப்பணைகள், படுகை அணைகள் மற்றும் தளமட்டச்சுவர்கள் அமைத்தல்

**நிறைவடைந்துள்ள பணிகள்**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், அர்த்தநாரிப்பாளையம் கிராமத்திலுள்ள, நல்லாற்றின் குறுக்கே ரூ.1.67 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணி நிறைவடைந்துள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், செஞ்சேரிபுத்தூர் கிராமத்திலுள்ள செஞ்சேரிக்கரை ஓடையின் குறுக்கே ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 220 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டம், பறையப்பட்டிபுதூர் கிராமத்தில் வாணியாற்றின் குறுக்கே ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 62 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், புதிநத்தம் கிராமம், மாம்படி அருகே எமதீர்த்த ஓடையின் குறுக்கே ரூ.0.56 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 19 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், அய்யம்பாளையம் கிராமத்திலுள்ள கொடகனாற்றின் குறுக்கே ரூ.5.65 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 450 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், பெருமுகை கிராமத்திலுள்ள ஓடையின் குறுக்கே ரூ.1.94 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 120 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், அவல்பூந்துரை கிராமத்திலுள்ள ஓடையின் குறுக்கே ரூ.1.17 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 21 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், புதுப்பட்டி கிராமத்திலுள்ள, புங்காற்றின் குறுக்கே ரூ.2.83 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 396 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், செல்லிவலசு கிராமத்திலுள்ள நங்காஞ்சியாற்றின் குறுக்கே ரூ.1.71 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், அஞ்செட்டி கிராமம் அருகே கோவையாற்றின் (குண்டுமடஹள்ளா) குறுக்கே ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 20 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், கூக்கல்துறை கிராமம் அருகே ரூ.0.90 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 900 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் வட்டம், உடையாரட்டி கிராமம் அருகே ரூ.0.71 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 200 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், முத்துநாயக்கன்பட்டி கிராமம் அருகே சரபங்காநதியின் குறுக்கே ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது.

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், வாலிப்பாறை மற்றும் கோவிந்தநகரம் கிராமங்களில் வைகையாற்றின் குறுக்கே ரூ.4.95 கோடி மதிப்பீட்டில் இரண்டு தடுப்பணைகள் அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 1,150 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தேனி மாவட்டம் மற்றும் வட்டம், அம்பாசமுத்திரம் கிராமத்தின் அருகே வைகையாற்றின் குறுக்கே ரூ.2.34 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 434 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், கோடங்கிப்பட்டி கிராமம், தீர்த்ததொட்டி முருகன் ஆலயத்தின் அருகே, கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே ரூ.1.55 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 72 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம் மற்றும் கிராமம், பட்டாக்களம் அருகே, கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே ரூ.1.09 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 150 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், காமயகவுண்டன்பட்டி மற்றும் நாராயணதேவன்பட்டி கிராமங்களின் அருகே, கூத்த நாச்சியார் ஓடையின் குறுக்கே ரூ.0.62 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 43 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் வட்டம், கீழ்நாட்டுக்குறிச்சி கிராமம், புல எண்.205–இல் வைப்பாற்றின் குறுக்கே ரூ.9.20 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 959 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், இருதயபுரம் கிராமத்தில் நந்தியாற்றின் குறுக்கே ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 171 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், தண்டலைபுதூர் கிராமத்தின் அருகே அய்யாற்றின் குறுக்கே ரூ.2.59 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 547 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், குமாரவாடி கிராமத்தின் அருகே கண்ணூத்து ஓடையின் குறுக்கே ரூ.0.67 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 198 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், வளையப்பாளையம் கிராமத்தின் அருகே பாலாற்றின் குறுக்கே ரூ.2.21 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 126 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், எள்ளபாளையம்புதூர் அருகே நெழலி கிராமத்தில் நெழலிக்கரை ஓடையின் குறுக்கே ரூ.2.19 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 676 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கொண்டாம்பட்டி கிராமத்தின் அருகே உப்பாறு ஓடையின் குறுக்கே ரூ.1.92 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 60 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், மும்முனி கிராமம் அருகே சுகநதியாற்றின் குறுக்கே ரூ.1.27 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 114 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், சமுத்திரம் கிராமத்தில் மாமுண்டியாற்றின் குறுக்கே ரூ.2.09 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 493 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி வட்டம், வேம்பனூர் கிராமத்தின் அருகே வெள்ளாற்றின் குறுக்கே ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 90 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், புட்லூர் கிராமத்தின் அருகே கூவம் ஆற்றின் குறுக்கே ரூ.6.22 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 592 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பழைய ஆதிக்குப்பம் கிராமம் அருகே பாம்பாற்றின் குறுக்கே ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 215 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நெல்வாய் கிராமம் அருகே நெல்வாய் மடுவின் குறுக்கே ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் வட்டம், வாலாஜாபாத் அருகில், அங்கம்பாக்கம் கிராமத்தில் புல எண்.133–இல் மடுவின் குறுக்கே ரூ.0.52 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 47 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் வட்டம், மாதிரிமங்கலம் கிராமம் அருகே காவேரி ஆற்றின் குறுக்கே ரூ.1.49 கோடி மதிப்பீட்டில் தளமட்டச் சுவர் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 1,183 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

நாகப்பட்டினம் மாவட்டம், கீவளூர் வட்டம், கக்கழனி கிராமம் அருகே கடுவையாற்றின் குறுக்கே ரூ.1.46 கோடி மதிப்பீட்டில் தளமட்டச் சுவர் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 808 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் வட்டம், கொடிமங்கலம் கிராமத்தில் காஞ்சிவாய் வாய்க்கால், நாகம்பாடி வாய்க்கால் மற்றும் நல்லாவூர் வாய்க்கால்களுக்கு நீர் வழங்க நாட்டாற்றின் குறுக்கே 70/3 மைலில் ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் தளமட்டச் சுவர் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 1,537 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், கொத்தங்குடி கிராமத்தில் வீரசோழன் ஆற்றின் குறுக்கே ரூ.0.93 கோடி மதிப்பீட்டில் தளமட்டச் சுவர் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 577 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் வட்டம், முருகன்தோட்டம் கிராமம் அருகே மகிமலையாற்றின் குறுக்கே ரூ.0.52 கோடி மதிப்பீட்டில் தளமட்டச் சுவர் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 351 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

புதுக்கோட்டை மாவட்டம், கொளத்தூர் வட்டம், சூரியூர் (வில்லாரோடை) கிராமத்தின் அருகே கோரையாற்றின் குறுக்கே ரூ.3.09 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 284 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், காவனூர் கிராமம் அருகே விருசுளியாற்றின் குறுக்கே ரூ1.71 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 295 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நெய்வேலிவடபாதி கிராமம் அருகே, அக்னியாற்றின் குறுக்கே ரூ.7.45 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 883 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், மயிலாடும்பாறை கிராமம் அருகே, வைகையாற்றின் குறுக்கே ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 457 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், கொம்பன்குளம் கிராமத்தின் அருகே கருமேனியாற்றின் குறுக்கே ரூ.1.23 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், மணஞ்சேரி கிராமம், காவேரியாற்றின் குறுக்கே உள்ள படுகை அணையினை ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் மறுகட்டுமானம் செய்யும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 984 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம் மற்றும் கிராமத்திலுள்ள திருவையாறு, கல்யாணபுரம், ஊமை வாய்க்கால்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு காவேரி ஆற்றின் குறுக்கே 37/6 மைலில் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் தளமட்டச் சுவர் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 1,246 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், பழையூர் கிராமத்திலுள்ள பாமணியாற்றின் குறுக்கே ரூ.1.68 கோடி மதிப்பீட்டில் தளமட்டச் சுவர் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 253 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், கடைத்தேறு கிராமத்திலுள்ள கடைத்தேறு வாய்க்காலின் படுகை மட்ட அளவினை பராமரித்து, நீர் வழங்கும் பொருட்டு கோரையாற்றின் குறுக்கே தொலைகல் 128.540 கி.மீ.–இல் ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் தளமட்டச் சுவர் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 1,284 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், நல்லிச்சேரி கிராமத்தில் அரசலாற்றின் குறுக்கே ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் தளமட்டச் சுவர் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 774 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம் மற்றும் கிராமத்திலுள்ள ஏ1 ஹனுமந்தபுரம் வாய்க்காலுக்கு நீர் வழங்கும் பொருட்டும், கோரையாற்றின் படுகை மட்ட அளவினை பராமரிக்கும் வகையிலும் கோரையாற்றின் குறுக்கே மைல் 62/1–இல் ரூ.1.36 கோடி மதிப்பீட்டில் தளமட்டச் சுவர் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 1,028 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், குமுட்டிதிடல் கிராமத்தில் கந்தபரிச்சனார் கிளை வாய்க்காலின் குறுக்கே ரூ.0.86 கோடி மதிப்பீட்டில் தளமட்டச் சுவர் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 410 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், அச்சன்குளம் கிராமம் அருகே வைப்பாற்றின் குறுக்கே ரூ.5.62 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 290 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

**நடைபெற்று வரும் பணிகள்**

அரியலூர் வட்டம், விளாங்குடி கிராமம், விளாங்குடி ஓடையின் குறுக்கே ரூ.0.995 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், மாலிகம்பட்டு கிராமத்தின் அருகே கெடிலம் ஆற்றின் குறுக்கே ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், ஆண்டான்கோவில் கிராமம், பெரியாறு நகரின் அருகே அமராவதி ஆற்றின் குறுக்கே ரூ.15.16 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டம், சேர்ந்தமங்கலம் கிராமத்தின் (முக்காணி) அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ரூ.25.75 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், பட்டரைபெரும்புதூர் கிராமத்தில் அருள்மிகு வீரராகவப் பெருமாள் கோவில் குளத்திற்கு நீர் கொண்டு செல்லும் வகையில் கொசஸ்தலையாற்றின் குறுக்கே ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம், கத்தாளம்பட்டு கிராமம் அருகே நாகநதி ஆற்றின் குறுக்கே ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

### 3.5. புதிய கால்வாய்கள் / வழங்கு வாய்க்கால்கள் அமைத்தல்

**நிறைவடைந்துள்ள பணிகள்**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், செங்கன்பசுவன்தலாவ் கண்மாயிலிருந்து எண்டப்பட்டி, கொண்டசமணஹள்ளு கண்மாய்கள் மற்றும் இடையிலுள்ள இதர 8 கண்மாய்களுக்கும் சின்னாற்றின் வெள்ள உபரி நீரினை வழங்கும் பொருட்டு ரூ.10.20 கோடி மதிப்பீட்டில் புதிய வழங்கு வாய்க்கால் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 650 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

கரூர் மாவட்டம், புதிய கட்டளை கதவணை கீழ் புறத்தில், கும்பகுழி வடிகாலின் நீரினை காவேரி ஆற்றில் திருப்பி விடுவதற்காக ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் வாய்க்கால் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 300 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், மருதண்டாப்பள்ளி ஏரி மற்றும் துரை ஏரிகளுக்கு நீர் வழங்கும் பொருட்டு கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்தின் வெள்ள உபரி நீரினை இடது பிரதான கால்வாயின் மூலம் திருப்பிவிடுவதற்கான புதிய வழங்கு வாய்க்கால் அமைக்கும் பணி ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 222 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், உள்ளிக்கடை கிராமத்திலுள்ள ஆடுதுறை கால்வாய்க்கு ஊட்டுக்கால்வாய் அமைக்கும் பணி ரூ.0.45 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 85 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

**நடைபெற்று வரும் பணிகள்**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்திலுள்ள இரன்னஹள்ளி, புளிக்கரை ஏரி மற்றும் 12 ஏரிகளுக்கு சின்னாற்றின் உபரி நீரினை ஜெர்தலாவ் வாய்க்கால் மூலம் வழங்கும் திட்டத்திற்காக ரூ. 0.10 கோடி மதிப்பீட்டில் நிலஅளவை மற்றும் மட்டஅளவை தயாரிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டத்தில் மணியாச்சிபள்ளம் ஓடையிலிருந்து வெள்ள நீரை வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கத்திற்கு திருப்பிவிடும் திட்டத்திற்காக ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் விரிவான ஆய்வறிக்கை தயாரிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி மற்றும் ஊத்தங்கரை வட்டங்களிலுள்ள 33 ஏரிகளுக்கு நீர் வழங்கும் பொருட்டு பாரூர் ஏரியின் கிழக்கு பிரதான கால்வாயின் தொலைகல் 15.95 கி.மீ–இல் வழங்கு வாய்க்கால் அமைக்கும் பணிக்கான விரிவான ஆய்வு மற்றும் நிலம் கையகப்படுத்தும் பணிகள் ரூ.14.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டத்தில் வறட்சி பாதித்த பகுதிகள் பயனடையும் வகையில் தற்போதுள்ள எண்ணேகோல் அணைக்கட்டின் இடது மற்றும் வலது புறத்தில் புதிய கால்வாய் அமைக்கும் பணி, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி மற்றும் அரூர் வட்டங்களிலுள்ள 16 கண்மாய்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு வாணியார் நீர்த்தேக்கத்தின் இடது பிரதான கால்வாயிலிருந்து கால்வாய் அமைக்கும் பணிகளுக்கான நில அளவை மற்றும் விரிவான தல ஆய்வுப் பணிகள் ரூ.0.40 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

சேலம் மாவட்டம், ஆனைமடுவு நீர்த்தேக்கத்தின் வெள்ள உபரி நீரை பேளூர் கிசான் வழங்கு வாய்க்காலிலிருந்து குளங்களை நிரப்புவதற்காக திருப்பி விடுவதற்கு பேளூர் அணைக்கட்டிலிருந்து ஒரு புதிய கால்வாய் அமைத்தல் மற்றும் வாழப்பாடி வட்டத்திலுள்ள குமாரசாமியூர், துக்கியம்பாளையம், மண்ணயக்கான்பட்டி மற்றும் வாழப்பாடி கிராமங்களில் தடுப்பணைகள் அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.3.68 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், சொக்கனூர் அக்ரஹாரம் கிராமத்தின் அருகில் பொன்னி ஓடையின் குறுக்கே ஒரு புதிய ஏரி அமைக்கும் திட்டத்திற்கான விரிவான ஆய்வுப் பணிகள் ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

சேலம் மாவட்டம், மேட்டூர் நீர்த்தேக்கத்தின் வெள்ள உபரி நீரினை நீரேற்று முறை மூலம் சரபங்காநதிக்கு வழங்கும் திட்டத்திற்கான விரிவான ஆய்வு பணிகள் ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், கஞ்சம்பட்டி ஓடையிலிருந்து இராமநாதபுரம் மாவட்டம் கமுதி மற்றும் கடலாடி வட்டங்களிலுள்ள சாயல்குடி மற்றும் இதர கண்மாய்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு ரூ.18.00 கோடி மதிப்பீட்டில் ஒரு வெள்ள நீர்க் கால்வாய் அமைக்கும் பணி முன்னேற்றத்திலுள்ளது.

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டத்தில் கொட்டக்குடி ஆற்றுடன் கலக்கும் 18—ஆம் கால்வாயினை ரூ.52.80 கோடி மதிப்பீட்டில் கூவிலங்காறு வரை நீட்டிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கடையம் கிராமத்திலுள்ள ஜம்புநதி அமைப்பின் மூலம் பாசனப் பயன் பெறும் பகுதிகளுக்கு, இராமநதியின் மிகை நீரினை திருப்பி விடுவதற்கான விரிவான ஆய்வு மற்றும் நிலம் கையகப்படுத்தும் பணிகள் ரூ.5.40 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், திடியூர் கிராமத்திலிருந்து பச்சையாறு வழிந்தோடிக்குக் கீழ்ப்புறம் சாலையின் வலது பக்க தடுப்புச் சுவருக்கு இணையாக 2.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழை நீர் மற்றும் வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கன்னடியன் கால்வாயின் குறுக்கே தொலைகல் 2,046 மீட்டரில் கல்லிடைக்குறிச்சி நகரத்தின் வடிகால் நீரை திருப்புவதற்காக ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்வழிந்தோடி அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், உப்பாறு கால்வாயுடன் பரம்பிக்குளம் – ஆழியாறு திட்ட பாசன அமைப்பினை இணைக்கும் பணி ரூ.8.10 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

### 3.6. புதிய ஏரி அமைத்தல்

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கொத்தயம் கிராமம் அருகே நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ரூ.11.12 கோடி மதிப்பீட்டில் புதிய ஏரி அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## 4.0. பாசன கட்டமைப்புகள் மற்றும் பாசன அமைப்புகளைப் புனரமைத்தல்

### 4.1. அணைகளைப் புனரமைத்தல்

**4.1.1.** உலக வங்கி நிதியுதவியுடன் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் ரூ.745.49 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நீர்வள ஆதாரத் துறையின் மூலம் 69 அணைகளில் ரூ.469.94 கோடி மதிப்பீட்டில் புனரமைப்புப்

பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2016–2017–ஆம் ஆண்டின் நிறைவுபெற்ற மற்றும் நடைபெற்று வரும் பணிகளின் விவரம் பின்வருமாறு:

**நிறைவடைந்துள்ள பணிகள்**

வேலூர் மாவட்டத்தில் மோர்தானா அணை, விழுப்புரம் மாவட்டத்தில் கோமுகி நதி அணை, தருமபுரி மாவட்டத்தில் தும்பளஹள்ளி, தொப்பையாறு மற்றும் சின்னாறு அணைகள், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சூளகிரி சின்னாறு, கிருஷ்ணகிரி மற்றும் கெலவரப்பள்ளி அணைகள், திருவள்ளூர் மாவட்டத்தில் பூண்டி நீர்த்தேக்கம் திருநெல்வேலி மாவட்டத்தில் அடவிநயினார் கோவில், வடக்குப்பச்சையாறு, கொடுமுடியாறு, நம்பியாறு மற்றும் கருப்பாநதி அணைகள், கன்னியாகுமரி மாவட்டத்தில் பொய்கையாறு அணை, விருதுநகர் மாவட்டத்தில், பிளவக்கல் பெரியாறு, கோல்வார்பட்டி மற்றும் வெம்பக்கோட்டை அணைகள், தேனி மாவட்டத்தில் மஞ்சளாறு மற்றும் சண்முகாநதி அணைகள், திண்டுக்கல் மாவட்டத்தில் மருதாநதி, கொடகனாறு, குதிரையாறு மற்றும் பாலாறு பொருந்தலாறு அணைகள், அரியலூர் மாவட்டத்தில் சித்தமல்லி அணை, சேலம் மாவட்டத்தில் ஆனைமடுவு அணை, திருச்சி மாவட்டத்தில் பொன்னனியார் மற்றும் உப்பாறு (திருச்சி) அணைகள், திருப்பூர் மாவட்டத்தில் திருமூர்த்தி மற்றும் அமராவதி அணைகள், கரூர் மாவட்டத்தில் நொய்யல் ஆத்துப்பாளையம் அணை, ஈரோடு மாவட்டத்தில் வரட்டுப்பள்ளம் அணை, கோயம்புத்தூர் மாவட்டத்தில் கீழ்நீராறு அணை, பாலக்காடு மாவட்டத்தில் (கேரளா) பெருவாரிப்பள்ளம், பரம்பிக்குளம் மற்றும் தூணக்கடவு அணைகள் ஆகிய 36 அணைகளில் ரூ.103.30 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள், மின் பணிகள், அடைப்பான்களை இயக்கும் அமைப்புகள் மற்றும் புனரமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

**நடைபெற்று வரும் பணிகள்**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், மேல் நீராறு அணை மற்றும் சோலையாறு அணை, பொள்ளாச்சி வட்டம், ஆழியாறு அணை ஆகிய அணைகளில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.28.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், வெலிங்டன் நீர்த்தேக்கம் மற்றும் காட்டுமன்னார்கோவில் மற்றும் சிதம்பரம் வட்டங்களிலுள்ள வீராணம் ஏரி ஆகியவற்றில் ரூ.14.50 கோடி மதிப்பீட்டிலான புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கேசரிகுளிஹள்ளா அணை, பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்திலுள்ள வாணியாறு அணை மற்றும் பெண்ணாகரம் வட்டத்திலுள்ள நாகவதி அணைகளில் ரூ.2.63 கோடி மதிப்பீட்டிலான புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், கீழ் பவானி அணை மற்றும் கோபி வட்டம், குண்டேரிப்பள்ளம் அணை ஆகியவற்றில் ரூ.22.69 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், செம்பரம்பாக்கம் ஏரியில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.3.85 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், சித்தார்–I அணை மற்றும் சித்தார்–II அணை மற்றும் கல்குளம் வட்டம், பெருஞ்சாணி அணைகளில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.13.71 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், பாம்பார் அணையில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.0.83 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கரியகோவில் அணை மற்றும் மேட்டூர் வட்டம், மேட்டூர் அணைகளில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.13.56 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், கீழணையில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.16.47 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், வைகை அணை மற்றும் பெரியகுளம் வட்டம், சோத்துப்பாறை அணைகளில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.9.69 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், மணிமுத்தாறு அணை, கடானா மற்றும் இராமநதி அணைகளில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.23.13 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், புழல் ஏரி மற்றும் பொன்னேரி வட்டம், சோழவரம் ஏரி ஆகியவற்றில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.4.79 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், சாத்தனூர் அணையில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.5.09 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், மணிமுக்தாநதி மற்றும் திண்டிவனம் வட்டம், வீடூர் அணைகளில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.77.09 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், பிளவக்கல் பெரியாறு அணை மற்றும் விருதுநகர் வட்டம், குல்லூர்சந்தை மற்றும் ஆனைக்குட்டம் அணைகளில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.12.87 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

**4.1.2.** இடுக்கி மாவட்டத்தில் (கேரளா) சிற்றணையில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள மாநில நிதியிலிருந்து ரூ.7.85 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலிருந்து கேரளாவில் உள்ள பெரியாறு அணைக்கு மணல் எடுத்துச் செல்ல 18.10.2016 அன்று சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்புற தடுப்புச்சுவரை உயர்த்தும் பணி நிறைவடைந்துள்ளது.

## 4.2. அணைக்கட்டுகள், தடுப்பணைகள், படுகை அணைகள் மற்றும் தளமட்டச் சுவர்களைப் புனரமைத்தல்

**நிறைவடைந்துள்ள பணிகள்**

ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், காளிங்கராயன் அணைக்கட்டைப் புனரமைக்கும் பணி ரூ.7.80 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 15,748 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குழித்துறையாறு சப்பாத் தடுப்பணையைப் புனரமைக்கும் பணி ரூ.6.35 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது.

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சரபங்கா ஆற்றின் குறுக்கே உள்ள 13 அணைக்கட்டுகளை புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் ரூ.5.23 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 2,280 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், இரகுநாத காவேரி வாய்க்காலுக்கு நீர் வழங்கும் பொருட்டு வெண்ணாற்றின் குறுக்கே உள்ள தளமட்டச் சுவரை மேம்படுத்தும் பணி ரூ.6.27 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 4,997 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், தென்பெரம்பூர் கிராமத்தில், வி.வி.ஆர். தலை மதகின் கீழ்புறம் பக்கவாட்டு தடுப்பு அமைப்புகளைப் புனரமைக்கும் பணி ரூ.1.95 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 2,88,516 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், பாச்சூர் மற்றும் குமாரக்குடி கிராமங்களில், பங்குனி வாய்க்காலிலுள்ள அதானி மற்றும் கூத்தூர் படுகை அணைகளை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 511 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், பொட்டிபுரம், சிலமலை, சிலமரத்துப்பட்டி மற்றும் தோம்புச்சேரி கிராமங்களில் சுத்தகங்கை ஓடையில் உள்ள எர்னான்குளம் அணைக்கட்டு, தம்பிரான்குளம் அணைக்கட்டு, அம்மாகுளம் அணைக்கட்டு, இலுப்பமரத்து அணைக்கட்டு, சென்னையகவுண்டன் அணைக்கட்டு மற்றும் போசிகவுண்டன் அணைக்கட்டு ஆகியவற்றை புனரமைக்கும் பணிகள் ரூ.2.38 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 993 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்னமனூர் அணைக்கட்டு மற்றும் அதன் வாய்க்கால் புனரமைக்கும் பணிகள் ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 1,022 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், மார்க்காயன்கோட்டை அணைக்கட்டு மற்றும் அதன் வாய்க்கால் புனரமைக்கும் பணிகள் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 409 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம், மலட்டாற்றின் குறுக்கே வீராணம் அணைக்கட்டு மறுகட்டுமானப் பணி ரூ.4.18 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 255 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், செவலபுரை அணைக்கட்டு மற்றும் வாய்க்கால் புனரமைக்கும் பணிகள் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 2,064 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

## 4.3. நீரொழுங்கிகளைப் புனரமைத்தல்

**நிறைவடைந்துள்ள பணிகள்**

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், ஆத்துப்பாளையம் நீர்த்தேக்கத்திற்கு நீர் வழங்கும் ஊட்டுக் கால்வாயின் தலை மதகின் கதவு மற்றும் முத்தூர் கதவணை அடைப்பான்கள் மற்றும் அதன் இயக்கு அமைப்புகளை புனரமைக்கும் பணிகள் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

கடலூர் மாவட்டம், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே உள்ள கீழணையின் வடக்கு பிரிவில் 1 முதல் 30 வரை உள்ள நீர்ப்போக்கிகளின் அடைப்பான்களை புனரமைத்து சீரமைக்கும் பணிகள் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

**நடைபெற்று வரும் பணிகள்**

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், பழைய கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே உள்ள பேரம்பட்டு அணைக்கட்டினை நீரொழுங்கியாக நீட்டிக்கும் பணி ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

## 4.4. கால்வாய்கள், வழங்கு வாய்க்கால்கள் மற்றும் ஆறுகளைப் புனரமைத்தல்

**நிறைவடைந்துள்ள பணிகள்**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆழியாறு ஊட்டுக்கால்வாய் தொலைகல் 0 கி.மீ. முதல் 6.000 கி.மீ. வரை புனரமைக்கும் பணி ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 50,798 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் ஜே. கிருஷ்ணாபுரம் கிளை கால்வாய் தொலைகல் 0 கி.மீ. முதல் 3.470 கி.மீ. வரை மற்றும் வலசுபாளையம் பகிர்மானக் கால்வாய் தொலைகல் 0 கி.மீ. முதல் 3.800 கி.மீ. வரை புனரமைக்கும் பணிகள் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 220 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், நரசிங்கபுரம் கிராமத்திலுள்ள நரசிங்கபுரம் ராஜா வாய்க்கால் வழங்கு வாய்க்கால் நவீனப்படுத்தும் பணி ரூ.10.20 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 2,037 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், சமுத்திரப்பட்டி கிராமத்திலுள்ள ராஜனேரி வழங்கு வாய்க்கால் நவீனப்படுத்தும் பணி ரூ.7.42 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 1,178 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி, மதுரை வடக்கு, மதுரை கிழக்கு மற்றும் மேலூர் வட்டங்களில் உள்ள பெரியாறு பிரதானக் கால்வாயின் 5, 6, 8, 9 மற்றும் 11–ஆவது பிரிவு வாய்க்கால்களை புனரமைக்கும் பணி ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 33,829 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், குமாரபாளையம் வாய்க்காலில் தொலைகல் 0 மீ – 17,400 மீட்டரில் பகுதி–I முதல் VI வரை புனரமைக்கும் பணி ரூ.8.38 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 7,017 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தில்லையாடி கிராமத்தில் மகிமலை ஆற்றின் வலது கரை தொலைகல் 147.860 கி.மீ–ல் உள்ள அரபி உபரி நீரொழுங்கியை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 1,948 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

நாகப்பட்டினம் மாவட்டம், தேவநதி ஆற்றினை (உப்பனார் வடிகால்) தரப்படுத்தி, மேம்படுத்தும் பணி ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 9,482 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில், மேட்டூர், எடப்பாடி மற்றும் திருச்செங்கோடு வட்டங்களில் உள்ள மேட்டூர் கிழக்கு கரை கால்வாயைப் புனரமைக்கும் பணி ரூ.30.00 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 27,000 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், குன்னூர் கிராமம் அருகில் குன்னூர் அணைக்கட்டு வழங்கு வாய்க்காலை நவீனப்படுத்தும் பணி ரூ.8.30 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 720 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், கெங்குவார்பட்டி கிராமத்தில் வைரவன் அணைக்கட்டு வழங்கு வாய்க்காலை நவீனப்படுத்தும் பணி ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 315 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தேனி மாவட்டம், தந்தை பெரியார் வாய்க்காலை தொலைகல் 0 மீ முதல் 12,000 மீ வரை சீரமைத்து மேம்படுத்தும் பணி ரூ.5.24 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 3,420 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், குள்ளபுரம் கிராமத்தில் குள்ளபுரம் அணைக்கட்டு வழங்கு வாய்க்காலை நவீனப்படுத்தும் பணி ரூ.2.88 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 592 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், கெங்குவார்பட்டி கிராமத்தில் மூங்கில் அணைக்கட்டு வாய்க்காலை நவீனப்படுத்தும் பணி ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 256 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், ஆலத்தூர் கிராமத்தில் வாஞ்சியாற்றின் குறுக்கே மைல் 77/0–இல் ஆலத்தூர் நீரொழுங்கியை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூ.0.65 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 359 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி மற்றும் இராதாபுரம் வட்டங்களில் கொடுமுடியாறு அமைப்பில் உள்ள வடமலையான் வாய்க்கால் மற்றும் அதன் ஏரிகளை சீரமைத்து மேம்படுத்தும் பணி ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 3,232 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர், ஆலங்குளம் மற்றும் திருநெல்வேலி வட்டங்களிலுள்ள மானூர் வழங்கு வாய்க்காலை மேம்படுத்தும் பணி ரூ.2.29 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 3,766 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருநெல்வேலி மாவட்டம் மற்றும் வட்டம், பள்ளமடை ஏரி மற்றும் பள்ளிக்கோட்டை வழங்கு வாய்க்காலை மேம்படுத்தும் பணி ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 1,533 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தாமரைக்குளம் கிராமத்தில் தாமரைக்குளம் வழங்கு வாய்க்காலை நவீனப்படுத்தும் பணி ரூ.4.86 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 490 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பாலக்கரை பகுதியிலுள்ள உய்யக்கொண்டான் வாய்க்காலை புனரமைத்து, நவீனப்படுத்தும் பணி ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 32,742 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

விருதுநகர் மாவட்டம் மற்றும் வட்டம், வடமலைகுறிச்சி ஏரியின் வழிந்தோடியிலிருந்து குல்லூர்சந்தை நீர்த்தேக்கம் வரையுள்ள கௌசிகா நதியை ரூ.3.00 கோடி மதிப்பீட்டில், மறுதரப்படுத்தும் பணி நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 2,891 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

**நடைபெற்று வரும் பணிகள்**

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், பொய்கை அணைக்கு நீர் வழங்கும் வகையில் சுங்கன் ஓடையின் பக்கக் கரைகளைப் பாதுகாத்து, இரப்பையாற்றை மேம்படுத்தும் பணி ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

மதுரை மாவட்டம், பெரியாறு பிரதானக் கால்வாயின் 1 முதல் 4 வரையிலான பிரிவு வாய்க்கால்கள், 12–ஆவது பிரிவு வாய்க்கால், பெரியாறு நீட்டிப்பு கால்வாய் மற்றும் அதன் பகிர்மானக் கால்வாய்களை புனரமைக்கும் பணிகள் ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வாய்க்காலை மேற்பூச்சு செய்து அதன் மதகுகளை மேம்படுத்தும் பணி ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், தானிப்பாடி அணைக்கட்டின் வழங்கு வாய்க்காலை புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூ.0.82 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

## 4.5. ஏரிகளை சீரமைத்தல்

**நிறைவடைந்துள்ள பணிகள்**

செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் (RRR) திட்டத்தின் கீழ் சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, காரைக்குடி மற்றும் சிவகங்கை வட்டங்களில் 19 ஏரிகளை செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் ரூ.7.60 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 2,660.19 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் (RRR) திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டம், ஆற்காடு, திருப்பத்தூர் வேலூர் மற்றும் வாணியம்பாடி வட்டங்களில் 48 ஏரிகளை செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் ரூ.18.99 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 9,421.36 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் (RRR) திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மற்றும் இராமநாதபுரம் வட்டங்களில் 22 ஏரிகள் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் ரூ.15.26 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 4,318.88 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

தேனி மாவட்டம் மற்றும் வட்டம், கோட்டூர் கிராமம், நாராயணசமுத்திரம் ஏரி மற்றும் சீலையம்பட்டி கிராமத்தில் சிறுகுளம் ஏரி ஆகியவற்றை நவீனப்படுத்தும் பணிகள் ரூ.0.75 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 347 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 33 முன்னாள் ஜமீன் ஏரிகளில் ரூ.8.20 கோடி மதிப்பீட்டில் சீரமைத்து, புனரமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

**நடைபெற்று வரும் பணிகள்**

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டம், கிளவரை கிராமம், தொலிக்கம்பட்டி ஏரியை நவீனப்படுத்தும் பணி ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் (RRR) திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மற்றும் இராமநாதபுரம் வட்டங்களில் 11 ஏரிகளில் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் ரூ.10.73 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 4 முன்னாள் ஜமீன் ஏரிகளில் ரூ.1.06 கோடி மதிப்பீட்டில் சீரமைத்து, புனரமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சென்னைக்கு குடிநீர் வழங்கும் சோழவரம், நேமம், போரூர் மற்றும் அயனம்பாக்கம் ஆகிய 4 ஏரிகளில் ரூ.130.00 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன. போரூர் மற்றும் நேமம் ஏரிகளில் பிற பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் (RRR) திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டம், ஆற்காடு மற்றும் வேலூர் வட்டங்களில் 4 ஏரிகளில் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் ரூ.1.73 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

## 5.0. வெள்ளத் தடுப்புப் பணிகள்

**நிறைவடைந்துள்ள பணிகள்**

காஞ்சிபுரம் மாவட்டம், வீரங்கால் ஓடை மற்றும் வேளச்சேரி ஏரியின் குறுக்கு வழி மாற்று வடிகாலை மேம்படுத்தும் பணி ரூ.112.24 கோடி மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்புக்குள்ளான அடையாறு மற்றும் அதன் துணை ஆறுகளை சீரமைத்து புனரமைப்பதற்காக ரூ.19.00 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்துதல், தூர்வாருதல் மற்றும் ஆற்றின் பண்புகள் மாறா வண்ணம் தரப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

காஞ்சிபுரம் நகர எல்லைக்குள் வெள்ளத்தில் சேதம் அடைந்த வேகவதி ஆற்றினை ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து, மறு சீரமைக்கும் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

## 6.0. கடலரிப்புத் தடுப்புப் பணிகள்

**நடைபெற்று வரும் பணிகள்**

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இரவிபுத்தன்துறை கிராமத்தில் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் கடலரிப்பு தடுப்புச்சுவர் புனரமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், மண்டைக்காடுபுதூரில் தூண்டில் வளைவு ரூ.7.82 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கு கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் ஒப்புதல் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்டம், வேம்பார், வீரபாண்டியபட்டினம், பெரிய தாழை, கல்லாமொழி, கீழ வைப்பார் ஆகிய இடங்களில் ரூ.69.49 கோடி மதிப்பீட்டில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், எர்ணாவூர் குப்பம் முதல் எண்ணூர் வரை தொலைகல் 15/200 கி.மீ முதல் 19/000 கி.மீ வரை ரூ.31.82 கோடி மதிப்பீட்டில் 10 தொடர் தூண்டில் வளைவுகள் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## 7.0. சாலைகள் அமைத்தல் மற்றும் பாலங்கள் கட்டுதல்

**நிறைவடைந்துள்ள பணிகள்**

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டம், வாணியாறு நீர்தேக்கத் திட்டத்தின் இடது மற்றும் வலது பிரதான கால்வாய்களிலுள்ள ஈப்பு பாதையை தார் சாலையாக்கும் பணி ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், குளச்சல் கிராமம், பத்தரை அருகே ரூ.0.64 கோடி மதிப்பீட்டில் பாம்பூரி வாய்க்காலின் குறுக்கே உள்ள பாலத்தை மறுகட்டுமானம் செய்யும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், வடகரை அணைக்கட்டின் கீழ்ப்புறம் ரூ.0.95 கோடி மதிப்பீட்டில் தெற்காற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், வெங்கடசமுத்திரம் கிராமத்தின் அருகே, தெற்காற்றின் குறுக்கே ரூ.0.90 கோடி மதிப்பீட்டில் தரைப்பாலம் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், பெருமனாடு கிராமம், பெருமனாடு குளத்தின் உபரி நீர் வாரியின் குறுக்கே ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் தரைப்பாலம் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், வைகை ஆற்றின் இடதுபுறத்தில் ரூ.4.03 கோடி மதிப்பீட்டில் சேவைச்சாலை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தென்கரை கிராமம், ஆடு பாலம் அருகே ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் வராகநதியின் குறுக்கே பாலம் கட்டும் பணி நிறைவடைந்துள்ளது

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், பூண்டி கிராமம், சத்தியமூர்த்தி சாகர் அணையிலுள்ள அணுகு சாலையினை ரூ. 1.31 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி நிறைவடைந்துள்ளது

**நடைபெற்று வரும் பணிகள்**

சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம், டாக்டர். இராதாகிருஷ்ணன் நகரிலுள்ள குடியிருப்புப் பகுதிகளை இணைக்கும் பொருட்டு வடக்கு பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் இருவழிப் பாலம் கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், பரமன்கேணி கிராமம், பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே ரூ.9.97 கோடி மதிப்பீட்டில் ஒருவழிப் பாலம் மறுகட்டுமானம் செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## 8.0. கட்டடங்கள் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பு பணிகள்

**நிறைவடைந்துள்ள பணிகள்**

கடலூர் மாவட்டத்தில் உள்ள பொதுப்பணித்துறை வளாகத்தில் திட்டம் மற்றும் வடிவமைப்பு உபகோட்டத்திற்கு பிரிவு அலுவலகங்களுடன் கூடிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணி ரூ. 0.28 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது.

பரம்பிக்குளம் அணைப்பகுதியிலுள்ள உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் குடியிருப்பில் ரூ.0.30 கோடி மதிப்பீட்டில் கல்நார் மேற்கூரையினை, கற்காரை மேற்கூரையாக மாற்றும் பணி நிறைவடைந்துள்ளது.

நாமக்கல் மாவட்டம், மேட்டூர் கால்வாய் பிரிவிற்கான பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டும் பணி ரூ.0.07 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது.

நாமக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், சரபங்கா வடிநில கோட்டத்திற்கு பிரிவு அலுவலகங்களுடன் கூடிய உபகோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி ரூ.0.28 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளது.

**நடைபெற்று வரும் பணிகள்**

திருப்பூர் மாவட்டம், அமராவதி நீர்த்தேக்கப் பகுதியில் உள்ள அலுவலர் குடியிருப்புகள் மற்றும் அலுவலகக் கட்டடங்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தும் பணி ரூ.0.30 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் வட்டம், பொதுப்பணித்துறை வளாகத்தில் அமைந்துள்ள திட்டம் மற்றும் வடிவமைப்பு உபகோட்டத்திற்கு பிரிவு அலுவலகங்களுடன் கூடிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணி ரூ.0.28 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

திருநெல்வேலியிலுள்ள திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்டம் மற்றும் உபகோட்ட அலுவலகங்களை சீரமைக்கும் பணி ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

**9.0. பூங்காக்களை மேம்படுத்துதல்**

**நடைபெற்று வரும் பணிகள்**

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையின் கீழ்புறம் அமைந்துள்ள எல்பிஎஸ் பூங்காவின் பிரதான நுழைவு வாயிலினை புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன.

**10.0. ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாறுதல்களை தழுவல் திட்டம்**

காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாறுதல்களை தழுவல் திட்டம் ரூ.1,560 கோடி மதிப்பீட்டில், ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவி பங்கு ரூ.1,092 கோடி மற்றும் மாநிலத்தின் பங்கு ரூ.468 கோடியாகும்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, காவேரி கழிமுகப் பகுதியிலுள்ள வெண்ணாறு அமைப்பிலுள்ள 6 ஆறுகள் / வடிகால்களான அரிச்சந்திரா நதி, அடப்பாறு, வெள்ளையாறு, பாண்டவையாறு, வளவனாறு வடிகால், வேதாரண்யம் கால்வாய் மற்றும் 13 நீரேற்றும் பணிகள் ரூ.960.66 கோடி மதிப்பீட்டில் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

**11.0. திறன்மிகு பாசன நீர் மேலாண்மைக்காக காவேரி வடிநிலப் பகுதிகளிலுள்ள பாசன அமைப்புகளை மேம்படுத்தி புனரமைக்கும் திட்டம்**

மத்திய நீர்க் குழுமம், இத்திட்டத்திற்கான முதற்கட்ட திட்ட அறிக்கையை ரூ.11,420 கோடி மதிப்பீட்டில் தயாரிக்க கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, ‘‘கல்லணைக் கால்வாய் உபவடிநிலத்தினை புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல்’’ திட்டத்திற்காக ரூ.2,298.75 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட

விரிவான திட்ட அறிக்கைக்கு மத்திய அரசு **30.09.2016** அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது. தொகுப்புவாரியான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**05.05.2017** அன்று நடைபெற்ற முதலீட்டு அனுமதி குழுக் கூட்டத்தில் முதலீட்டு அனுமதி பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எஞ்சிய தொகுப்புகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான காலக்கெடுவை மத்திய அரசு **31.12.2017** வரை நீட்டித்துள்ளது.

ரூ.**270.00** கோடி மதிப்பீட்டில் கட்டளை உயர்மட்டக் கால்வாய் பாசன அமைப்பை மேம்படுத்தி, புனரமைக்கும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை அரசின் பரிசீலனையிலுள்ளது.
பிற உபவடிநிலங்களான கீழ் கொள்ளிட உப வடிநிலம், நொய்யல் உப வடிநிலம், இராஜா வாய்க்கால் திட்டம், கீழ்பவானித் திட்டம், காவேரி உப வடிநிலம், வெண்ணாறு உப வடிநிலம் மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம் ஆகியவற்றிற்கு மத்திய நீர்க்குழுமத்தின் வழிமுறைகளின்படி விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
நீர் மேலாண்மைக்காக காவேரி வடிநில பாசன அமைப்புகளை தேசிய திட்டத்தின் கீழ் (National Project) ரூ.**14,500** கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தி, புனரமைப்பதற்கான திட்டம் தொடர்பான கருத்துருவை எஞ்சியுள்ள **8** விரிவான திட்ட அறிக்கைகளை தயாரித்தபின் அனுப்புமாறு மத்திய அரசு கோரியுள்ளது.

## 12.0. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்பு

தாமிரபரணி ஆற்றை கருமேனியாறு மற்றும் நம்பியாற்றுடன் இணைப்பதற்காக வெள்ளாங்குழி கிராமத்தின் அருகில் கன்னடியன் கால்வாயின் தொலைகல் **6.50** கி.மீ–இலிருந்து திசையன்விளை அருகிலுள்ள தேரி வரை திருத்திய நேர்ப்பாட்டின்படி **75.175** கி.மீ நீளத்திற்கு ரூ.**369.00** கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய வெள்ளநீர்க் கால்வாய் அமைக்கும் பணி முன்னேற்றத்திலுள்ளது.

முதல் நிலை, **18** தொகுப்பு பணிகளில், **9** தொகுப்புகள் நிறைவடைந்தும், **2** தொகுப்புகளில் ஒப்பந்தம் முன்கூட்டியே முடிவுக்கு கொண்டு வரப்பட்டும், எஞ்சிய **7** தொகுப்புகளில் பகுதிப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இரண்டாம் நிலை, **18** தொகுப்பு பணிகளில், **7** தொகுப்புகள் நிறைவடைந்தும், **1** தொகுப்பில் ஒப்பந்தம் முன்கூட்டியே முடிவுக்கு கொண்டுவரப்பட்டும், **1** தொகுப்பு முன்னேற்றத்திலும், **9** தொகுப்புகளில் பகுதிப் பணிகள் நிறைவடைந்துள்ளன. நிலம் கையகப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

மத்திய அரசின் நீர்வள ஆதாரம், நதிகள் மேம்பாடு மற்றும் கங்கை சீரமைப்பு அமைச்சகம் **19.04.2016** அன்று இத்திட்டத்திற்கு ரூ.**872.45** கோடிக்கு (**2014–2015** விலைவிகிதப்படி) முதலீட்டு அனுமதி வழங்கியுள்ளது.

நிலை **1** மற்றும் நிலை **2** பணிகளுக்காக **310.62** கோடி ரூபாய் மற்றும் நிலை **1** முதல் நிலை **4** வரை நிலம் கையகப்படுத்துதல் பணிகளுக்காக **232.70** கோடி ரூபாயும் சேர்த்து

இத்திட்டத்தின் ஒரு பகுதிக்கு 543.32 கோடி ரூபாய்க்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் (பகுதி) 13.04.2017 அன்று வழங்கப்பட்டுள்ளது.

## 13.0. அணைகள் மற்றும் நீர் நிலைகளைத் தூர்வாருதல்

### 13.1. வைகை, பேச்சிப்பாறை, மேட்டூர், அமராவதி நீர்த்தேக்கங்கள் மற்றும் திருவைகுண்டம் அணைக்கட்டினை தூர்வாருதல்

4 நீர்த்தேக்கங்கள் மற்றும் 1 அணைக்கட்டிற்கான ரூ.8.35 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை மற்றும் விரைவான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை தயாரிக்கும் பணி திருவாளர்கள் வாப்கோஸ் நிறுவனத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வைகை, அமராவதி நீர்த்தேக்கங்கள் மற்றும் திருவைகுண்டம் அணைகட்டு ஆகியவற்றை தூர்வாரும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பேச்சிப்பாறை மற்றும் மேட்டூர் நீர்த்தேக்கங்களை தூர்வாருவதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

வைகை, பேச்சிப்பாறை, மேட்டூர் மற்றும் அமராவதி நீர்த்தேக்கங்களுக்கான விரைவான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் ஆணைப்படி திருவைகுண்டம் அணைகட்டின் முழுகொள்ளவினை மீளப்பெற ரூ.5.93 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள். தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் ஆணையினை எதிர்நோக்கி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

### 13.2. பரப்பலாறு நீர்த்தேக்கத்தினை தூர்வாருதல்

பரப்பலாறு நீர்த்தேக்கத்தின் கொள்ளளவினை மீட்டெடுக்கும் பொருட்டு 19.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. பாதையை பயன்படுத்துவதற்கு மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் தூர்வாரும் பணிகள் துவங்கப்படும்.

### 13.3. வீராணம் ஏரியைத் தூர்வாருதல்

வடவாறு வாய்க்காலினை புனரமைத்தல் மற்றும் அதன் திறனை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை உள்ளடக்கிய, 1,465 மில்லியன் கனஅடி அளவிலான வீராணம் ஏரியினை தூர்வாரி அதன் முழுக் கொள்ளளவினை மீளப்பெறும் பணி ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது.

### 13.4. நீர்த்தேக்கங்கள் / அணைகளில் வண்டல் மண் படிவு ஆய்வு

2016–2017–ஆம் ஆண்டில் கீழ்காணும் 12 நீர்த்தேக்கங்கள் / அணைகளில் ரூ.0.54 கோடி செலவில் அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (DRIP) வண்டல் மண் படிவு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

1. ஆழியாறு அணை (கோயம்புத்தூர் மாவட்டம்)
2. குதிரையாறு அணை (திண்டுக்கல் மாவட்டம்)
3. கோமுகி நதி அணை (விழுப்புரம் மாவட்டம்)
4. வெல்லிங்டன் நீர்த்தேக்கம் ( கடலூர் மாவட்டம்)
5. சித்தாறு–I நீர்த்தேக்கம் ( கன்னியாகுமரி மாவட்டம்)
6. கடனா நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)
7. மணிமுத்தாறு நீர்த்தேக்கம் ( திருநெல்வேலி மாவட்டம்)
8. வென்னீராறு அணை ( தேனி மாவட்டம்)
9. மணலாறு அணை (தேனி மாவட்டம்)
10. இரவங்கலாறு அணை (தேனி மாவட்டம்)
11. பார்சன்ஸ் பள்ளத்தாக்கு அணை (நீலகிரி மாவட்டம்)
12. போர்த்திமந்து அணை (நீலகிரி மாவட்டம்)

### 14.0. மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்

வருவாய் குறுவட்டங்களின் அடிப்படையில் நுண்ணிய அளவில் மேற்கொள்ளப்பட்ட நிலத்தடி நீர் குறித்த மதிப்பீட்டிற்கு 09.06.2016 அன்று அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதனடிப்படையில், தமிழ்நாட்டில் உள்ள 1,129 குறுவட்டங்கள் 5 வகைகளாக வகுக்கப்பட்டு, 374 அதிநுகர்வு, 48 மிகவும் அபாயகரம், 235 மித அபாயகரம், 35 தரம் குறைந்த / உவர்நீர் மற்றும் 437 பாதுகாப்பான குறுவட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2013–ஆம் ஆண்டிற்கான குறுவட்டங்கள் வாரியான நிலத்தடி நீர் மதிப்பீட்டிற்கு விவரங்களை சேகரித்து பகுப்பாய்வு செய்யும் பணி முடிவு பெற்று மத்திய நீர்வள ஆதார அமைச்சகத்தின் ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் கடல் நீர் – நிலத்தடி நீர் கலக்கும் பகுதிகளை மதிப்பிடுவதற்காக நிலத்தடி நீர் மட்டம் மாதந்தோறும் கணக்கிடப்பட்டு 284 ஆய்வுக் கிணறுகளிலிருந்து நீர் மாதிரிகள் ஆண்டிற்கு இருமுறை சேகரிக்கப்பட்டு, புவிவேதியல் ஆய்வகங்களில் ஆய்வு செய்யப்படுகின்றன.

புவியியல், புவியமைப்பியல் மற்றும் புவிநீரியல் அளவீடுகள் மாதந்தோறும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த விவரங்களைக் கொண்டு நீர்த்தாங்கிகளின் எல்லைகளை வரையறுக்கும் பணிகள் ஆய்வு செய்யப்பட்டு தொகுக்கப்படுகின்றன.

## 15.0. நீர் ஆய்வு நிறுவனம்

பரவனாறு ஆற்றுப்படுகைக்கான நுண்ணிய அளவிலான மறு ஆய்வுப் பணி நிறைவடைந்துள்ளது.

பெண்ணையாறு வடிநிலம் தொடர்பான செயற்கைக்கோள் புகைப்படங்கள் ஆராயப்பட்டு பல வகைப்பட்ட வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. தொலையுணர்வு ஆய்வு தொடர்பான அறிக்கை பெண்ணையாறு வடிநிலத்திற்கு இறுதி செய்யப்பட்டது.

தள ஆய்வுடன் கூடிய பரவனாறு வடிநிலத்திற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்தது.

புவி தகவல் அமைப்பின் அடிப்படையிலான புள்ளி விவர தொகுப்பினை உருவாக்கவும், தனித்தன்மை குறியீடு வழங்கவும் பாசனக் கட்டுமானங்களின் விவரங்களை சேகரிக்கும் பணி தொடரப்படுகிறது.

நீர்ஆதாரத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 14,098 ஏரிகளின் புவி தகவல் அமைப்பின் அடிப்படையிலான புள்ளி விவர தொகுப்பினை செல்லத்தக்கதாக்கும் பணி தொடரப்படுகிறது.

சிறப்புப் பகுதி மேம்பாடுத் திட்டத்தை மேம்படுத்துவதற்கான திட்டக் கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக (ITDP) தொலையுணர்வு மற்றும் புவி தகவல் அமைப்பு உத்திகளை பயன்படுத்தி தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள மலைகளில் ‘‘நீர் சேமிக்க உகந்த இடங்கள் கண்டறியும்’’ பணி மேற்கொள்ளப்பட்டன.

## 16.0. பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்

2016–2017ம் ஆண்டில், அலுவலர்களுக்கு பாசன அமைப்புகளை புனரமைப்பதில் நவீன தொழில் நுட்பங்கள், நீர்நிலை மற்றும் நதி மேலாண்மை சவால்கள், சுற்றுப்புறச்சூழல் மற்றும் அணை பாதுகாப்பு குறித்த பயிற்சிகள் இந்நிலையத்தால் அளிக்கப்பட்டது. மேலும், கணிணி பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

அலுவலர்களுக்கு மாநிலத்திற்குள் பயிற்சி சுற்றுலா நடத்தப்பட்டது. தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (தாய்–2) மேற்கொள்ளப்படும் சிறு பாசன ஏரிகள் மேம்படுத்தும் பணிகள் குறித்து சிறப்பு பயிற்சிகள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அலுவலர்களுக்கு 47 தொகுதிகளாக நடத்தப்பட்டன.

நபார்டு நிதியுதவியுடன் “நீர் மற்றும் மண் பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த பண்ணை” குறித்த இரண்டு பயிற்சிகள் வேளாண் பெருமக்களுக்கு வழங்கப்பட்டன.

2016–2017ம் ஆண்டில் அரசு மானியத்தின் கீழ் 42 பயிற்சிகள் நடத்தப்பட்டன. அரசு மானியம், தாய்–2 திட்டம் மற்றும் இதர வைப்பு நிதிகளின் கீழ் 2557 பங்கேற்பாளர்கள் (144 விவசாயிகள் & 2413 அலுவலர்கள்) பயனடையும் வகையில் மொத்தம் 93 பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

## 17.0. மணல் குவாரி

மணல் குவாரிகள் தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெற்று இயக்கப்படுகின்றன. மாநிலத்தின் மணல் தட்டுப்பாட்டினைத் தவிர்க்கும் பொருட்டு, அரசு நேரடியாக மணல் குவாரிகளை இயக்கிவருவதுடன், அதிக எண்ணிக்கையிலான மணல் குவாரிகளையும் கண்டறிந்து வருகிறது. மணலுக்கான தேவையை ஈடுசெய்யும் பொருட்டு, தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் அனுமதியுடன் மணல் குவாரி இயக்கத்தில் இயந்திரங்களின் எண்ணிக்கை தற்பொழுது அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்சமயம், ஒரு லோடு (2 யூனிட்) மணல், வரிகள் மற்றும் ஏற்றுக்கூலி நீங்கலாக, ரூ.800/–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 2016–2017–ஆம் ஆண்டில், 48 மணல் குவாரிகள் மூலம் அரசுக்கு ரூ.86.33 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 18.0. கொதிகலன்கள் இயக்ககம்

2016–2017ஆம் ஆண்டில் கார்பன் ஸ்டீல் மற்றும் அலாய் ஸ்டீல் ஆகிய வகைகளில், ஆழ்குழாய், நெடுங்குழாய் மற்றும் தகடுகள் ஆகிய தர பற்றவைப்புப் பணிகளுக்கான தேர்வுகள் நடத்தப்பட்டு தேர்ச்சி பெற்ற 270 நபர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

2016–2017 ஆம் ஆண்டில் மாநிலத்தில் 248 புதிய கொதிகலன்கள் மற்றும் அதனுடன் இணைந்த குழாயமைப்புகளை, நடப்பிலுள்ள பல்வேறு நிறுவனங்கள் மற்றும் புதிய நிறுவனங்களில் நிறுவும் பணிக்கு கொதிகலன்கள் இயக்ககத்தால் அனுமதி அளித்துள்ளதுடன் பதிவு செய்யும் பணியும் முடிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 5,276 கொதிகலன்களில் இயக்கத்திலுள்ள 4,925 கொதிகலன்களின் உற்பத்தி நிலைக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம், குறிப்பிட்ட காலத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இத்துடன் பல்வேறு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட 4,42,098 உயர் அழுத்த அடைப்பான்கள், 70,331 உயர் அழுத்த பெரிய குழாய் சாதனங்கள், 6,188 சிறிய குழாய் சாதனங்கள் ஆகியவற்றிற்கு ஆய்வு மேற்கொண்டு, அவற்றின் தர உத்தரவாதத்திற்கு உரிய சான்றிதழ்களை கொதிகலன்கள் இயக்ககம் வழங்கியுள்ளது. பல்வேறு வகையான கொதிகலன்கள் மற்றும் கொதிகலன் உதிரி பாகங்கள் நிர்மானிப்பதற்கான சுமார் 398 விவரக் குறிப்பு சிறு புத்தகங்கள் மற்றும் 428 வடிவமைப்பு ஆவணங்கள் ஆகியவற்றிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

கொதிகலன்கள் மற்றும் கொதிகலன் உதிரி பாகங்கள் தயாரிப்பிற்கான ஆய்வு, நிறுவப்பட்ட கொதிகலன்களின் வருடாந்திர ஆய்வு, பல்வேறு வடிவமைப்பு வரைபடங்கள் கூர்ந்தாய்வு,

பற்றவைப்பாளர் தேர்வு மற்றும் சான்று வழங்குவதற்கான மற்றும் கொதிகலப் பணியாளர் மற்றும் கொதிகல இயக்கப் பொறியாளர்களுக்கு தேர்வு போன்றவற்றின் பலதரப்பட்ட கட்டணங்கள் வாயிலாக ரூ.6.50 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 19.0. பன்மாநில நதிநீர் பிரச்சனைகள்

### 19.1. காவேரி நதிநீர்த் தாவா

தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகளாலும், உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களினாலும், மத்திய அரசு, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை 19.02.2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிட்டது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். இதனால், காவேரி டெல்டா பகுதியில் உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை செவ்வனே செயல்படுத்த, அதன் பரிந்துரைப்படி, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகள் உடனடியாக அமைக்கப்பட வேண்டும் என மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் 27.02.2017 அன்று அளித்த கோரிக்கை மனுவில், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட வேண்டும் என மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

2016–2017–இல் தமிழ்நாட்டிற்கு சேர வேண்டிய உரிய நீரை கர்நாடகம் வழங்குவதற்காக உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு விசாரணைக்கு வந்தபோது, உச்சநீதிமன்றம் தனது 20.09.2016 நாளிட்ட ஆணையில், நடுவர்மன்ற இறுதி ஆணைப்படி காவேரி மேலாண்மை வாரியத்தை மத்திய அரசு 4 வாரங்களுக்குள் அமைக்க வேண்டும் என ஆணையிட்டது. மீண்டும் 30.09.2016 அன்று, இவ்வாணையை உறுதி செய்தது. எனினும், மத்திய அரசு 03.10.2016 அன்று தாக்கல் செய்த மனுவினை 04.10.2016 அன்று உச்சநீதிமன்றம் விசாரித்து காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பது குறித்து பிறப்பித்த உத்தரவுகளை தள்ளிவைத்தது.

உச்ச நீதிமன்றத்தில் படுகை மாநிலங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டு மனுக்கள் விசாரணைக்கு ஏற்புடையதா என்பது குறித்து 18.10.2016 மற்றும் 19.10.2016 ஆகிய தேதிகளில் வாதங்கள் நடைபெற்றன. உச்ச நீதிமன்றம் 09.12.2016 அன்று இந்த மேல் முறையீட்டு மனுக்கள் அதன் விசாரணைக்கு உகந்தவை என ஆணையிட்டது. இம்மனுக்கள் மீது ஆரம்பகட்ட வாதங்கள் 07.02.2017 அன்று நடைபெற்றன. இவ்வழக்கு 11.07.2017 அன்று முதல் மீண்டும் தொடர்ச்சியாக விசாரிக்கப்படும் என உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

காவேரி மேல் முறையீட்டு மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும் பொழுது காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பது குறித்து மீண்டும் வலியுறுத்தப்படும்.

**19.2 கர்நாடக அரசு மேகதாதுவில் இரண்டு அணைகள் கட்ட முற்படுவதை தடை செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு**

கர்நாடக அரசு, மேகதாது எனுமிடத்தில் புதிதாக இரண்டு அணைகள் கட்ட உள்ளதாகவும், இதற்கான, தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கையை தயார் செய்ய தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து ''உலகளாவிய விருப்பம் கோரும் அறிவிப்பை (Global Expression of Interest)'' கோரியுள்ளது என பத்திரிகையில் 12.11.2014 அன்று செய்திகள் வந்ததையடுத்து, இதுபற்றி மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு 12.11.2014 அன்று எழுதப்பட்ட கடிதத்தில், இப்பிரச்சனையில் தலையிட்டு கர்நாடக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கையை நிறுத்திவைக்கவும், மற்றும் எந்த ஒரு பாசன, நீர்மின், நீரேற்றுப் பாசன திட்டங்கள் மற்றும் குடிநீர் வழங்கல் என்ற போர்வையின் அடிப்படையில் எந்தவொரு திட்டத்தையும் கர்நாடக அரசு, தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று கர்நாடக அரசிற்கு அறிவுரை வழங்குமாறும் வலியுறுத்தப்பட்டது. மேலும், தமிழ்நாட்டின் இசைவு பெறாமல் கர்நாடக அரசின் எந்த ஒரு திட்டத்திற்கும் மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனங்கள் அமைச்சகம் மற்றும் நீர் ஆதார அமைச்சகம், ஒப்புதல் அளிக்கக்கூடாது என அவ்வமைச்சகங்களுக்கு அறிவுறுத்தும்படியும் அக்கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதே போன்று கர்நாடக அரசுக்கு 12.11.2014 அன்றும் மத்திய நீர் ஆதாரத்துறை அமைச்சகத்திற்கு 13.11.2014 அன்றும் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

இக்கடிதங்களுக்கு கர்நாடக அரசிடமிருந்தோ மத்திய அரசிடமிருந்தோ பதில் ஏதும் வராததால், இதுகுறித்து உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனுவை தமிழ்நாடு அரசு 18.11.2014 அன்று தாக்கல் செய்தது.

கர்நாடக அரசு 18.11.2014–ஆம் நாளிட்ட கடிதத்தில் உச்ச நீதிமன்றத்திற்கு தெரிவிக்காமல் இத்திட்டத்தை செயல்படுத்தப் போவதில்லை என தெரிவித்துள்ளது.

மத்திய நீர் ஆதாரம், ஆற்று மேம்பாடு மற்றும் கங்கை புனரமைத்தல் அமைச்சரது 08.01.2016 நாளிட்ட கடிதத்தில், கர்நாடகத்திலிருந்து பெறப்பட்ட சிவசமுத்திரம் நீர்மின் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை, பிற காவேரி வடிநில மாநிலங்களின் குறிப்புரை பெறுமாறு வலியுறுத்தி திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேகதாது திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை பெறப்படுமானால் அதனை காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணைப்படி ஆய்வு செய்யப்படும் என்று தெரிவித்து, கர்நாடக அரசு இத்திட்டம் குறித்த அறிக்கையினை பிற காவேரி வடிநில மாநிலங்களுடன் பகிர்ந்து கொண்டு அவைகளின் இசைவினை பெறுமாறும் வலியுறுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு, உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், உச்ச நீதிமன்றத்திற்கு முதலில் தெரிவிக்காமல் மேகதாதுவில் அணை கட்டுவது பற்றிய எண்ணம் ஏதும் இல்லை என கர்நாடக அரசு அதன் 08.03.2016–ஆம் நாளிட்ட கடிடத்தில் மீண்டும் தெரிவித்துள்ளது.

27.02.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அளித்த கோரிக்கை மனுவில் காவேரியில் கர்நாடக அரசு மேகதாது அல்லது

வேறு எவ்வித திட்டத்தையும் மேற்கொள்ள கூடாது என அவ்வரசுக்கு அறிவுறுத்துமாறும், காவேரி பிரச்சனை முற்றிலும் முடிவு செய்யப்படும் வரை எந்த திட்டத்தையும் மத்திய அரசு அனுமதிக்கக்கூடாது எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**19.3 கேரள அரசு பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரியில் அணை கட்டுதல்**

கேரள அரசு பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி என்ற இடத்தில் அணையை கட்டுவதற்கு பணிகள் துவங்கியுள்ளதாகவும், இதற்கு கேரள முதலமைச்சர் **03.11.2014** அன்று காணொலிகாட்சி வழியாக அடிக்கல் நாட்டியுள்ளதாகவும் **06.11.2014** அன்று பத்திரிகைகளில் செய்தி வந்தவுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பாரத பிரதமருக்கு **08.11.2014** அன்று, கேரள அரசு, பாம்பாறு உப படுகையில் கட்ட உத்தேசித்துள்ள அணைகள் பற்றிய அனைத்து விவரங்களை தமிழகத்திற்கு அளிக்கவேண்டும் எனவும் மற்றும் காவேரி மேலாண்மை வாரியம் ஏற்படுத்தும் வரையிலும் மற்றும் தமிழ்நாட்டின் இசைவு பெறாமலும் இத்தகைய திட்டங்களை கேரள அரசு மேற்கொள்ளக் கூடாது எனவும் கேரள அரசுக்கு அறிவுரை வழங்குமாறு கடிதம் எழுதப்பட்டது. இதே போன்று கேரள அரசுக்கு **08.11.2014** அன்றும் மத்திய நீர் ஆதார அமைச்சகத்திற்கு **13.11.2014** அன்றும் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

கேரள அரசு மற்றும் மத்திய அரசிடமிருந்து பதில் வராத நிலையில், இப்பொருள் குறித்து உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு இடைக்கால மனு ஒன்றை **28.11.2014** அன்று தாக்கல் செய்தது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **27.2.2017** அன்று மாண்புமிகு பாரத பிரதமருக்கு அளித்துள்ள கோரிக்கை மனுவில் பாம்பாறு படுகையில் கேரள அரசு மேற்கொண்டு வரும் திட்டங்களை நிறுத்தி வைக்குமாறும் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும் மேல் முறையீட்டு மனுக்கள் முடிவு செய்யப்படும் வரையிலும் காவேரி படுகையில் எந்த திட்டத்தையும் கேரள அரசு மேற்கொள்ளக் கூடாது எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் மனு **21.03.2017** அன்று உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, கேரள வழக்கறிஞர் பவானி ஆற்றில் கேரள மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட நீர் அளவை பயன்படுத்தும் பொருட்டே கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தார். உச்சநீதிமன்றம், அத்தகைய உறுதிமொழியை தமிழ்நாடு அரசிற்கு வழங்கும்படி ஆணையிட்டது. அவ்வாறே, கேரள அரசு, தமிழ்நாடு அரசுக்கு கடிதம் அனுப்பியது. எனினும், இதன் தொடர்ச்சியாக, கேரள அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் பற்றிய முழுவிவரங்கள் வழங்கும்படி கேரள அரசிற்கு கடிதம் அனுப்பப்பட்டது. கேரள அரசு, அணைகள் கட்டும் திட்டங்களுக்கான அனைத்து விவரங்களையும் தமிழ்நாட்டிற்கு இதுவரையில் அளிக்காததால், இதற்கான அனைத்து விவரங்களையும் கேரள அரசு அளிக்க உரிய அறிவுரை வழங்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **24.5.2017** அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டு நடைமுறைக்கு வரும் வரையில் கேரள அரசு எவ்வித கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது என அறிவுறுத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 19.4 கேரள அரசு பவானி ஆற்றின் குறுக்கே அட்டப்பாடி பள்ளத்தாக்கில் அணை கட்டுதல்

காவேரி நடுவர் மன்றம், அதன் **5.2.2007–**ஆம் நாளிட்ட இறுதி ஆணையில், கேரள பவானி படுகைக்கென மொத்தம் **6** டி.எம்.சி. அடி நீரை ஒதுக்கீடு செய்தது. இதில், அட்டப்பாடி பாசன உபயோகத்திற்காக **2.87** டி.எம்.சி. அடி நீரை மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது.

அட்டப்பாடி பாசனத் திட்டம் பற்றி ஊடகங்களில் செய்திகள் பிப்ரவரி, **2012–**ல் வந்ததையடுத்து, காவேரி நடுவர் மன்ற **5.2.2007–**ஆம் நாளிட்ட இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்படும் வரையிலும் மற்றும் உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டு மனுக்கள் மற்றும் காவேரி நடுவர் மன்றத்தில் விளக்கம் கோரும் மனுக்கள் முடிவுக்கு வரும் வரையிலும் மற்றும் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட்டு நடைமுறைக்கு வரும் வரையிலும், கேரள அரசு, அட்டப்பாடியில் அணைகட்டுதல் போன்ற எந்த ஒரு திட்டத்தையும் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என மத்திய அரசுக்கும், கேரள அரசுக்கும் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டது.

கேரள அரசு, தன்னிச்சையாக இத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடிற்கான நிலையான ஆய்வு வரம்புகள் மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்க வேண்டி மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின்கீழ் உள்ள வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவினை அணுகியது.

இக்குழுவின் **11.08.2016** மற்றும் **12.8.2016** ஆகிய நாட்களில் நடைபெற்ற கூட்டத்தில், தமிழ்நாட்டின் கருத்துக்களைப் பெறாமல், கேரள அரசின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆய்வு செய்வதற்காக நிலையான ஆய்வு வரம்புகளை அளிப்பதற்கு பரிந்துரை செய்ய முடிவெடுக்கப்பட்டது.

இதனை எதிர்த்து, இப்பரிந்துரையை திரும்பப் பெறக்கோரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **27.8.2016** அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை இதுகுறித்து **02.09.2016** அன்று ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

மத்திய சுற்றுச் சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் தனது **10.10.2016** நாளிட்ட கடிதத்தில் இத்திட்டம் குறித்து வல்லுநர் மதிப்பீட்டுக்குழுவின் **(**Expert Appraisal Committee**)** பரிந்துரைகள் உச்சநீதி மன்றத்தில் உள்ள வழக்குகள் முடிவாகும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

மேலும், மத்திய நீர் ஆதாரம், ஆற்று மேம்பாடு மற்றும் கங்கை புனரமைத்தல் அமைச்சகத்தின் **16.11.2016–**ம் நாளிட்ட கடிதத்தில், இத்திட்டத்தை பற்றிய ஆரம்ப கட்ட அறிக்கையோ அல்லது விரிவான அறிக்கையோ மத்திய நீர்வளக் குழுமத்தில் பெறப்படவில்லை எனவும், அத்தகைய

அறிக்கை பெறப்படும் போது மத்திய நீர்வள குழுமத்தின் வழிகாட்டுதல்கள் மற்றும் நடுவர் மன்ற இறுதி ஆணைப்படி பரிசீலிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் மனு 21.03.2017 அன்று உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, கேரள வழக்கறிஞர் பவானி ஆற்றில் கேரள மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட நீர் அளவை பயன்படுத்தும் பொருட்டே கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தார். உச்சநீதிமன்றம், அத்தகைய உறுதிமொழியை தமிழ்நாடு அரசிற்கு வழங்கும்படி ஆணையிட்டது. அவ்வாறே கேரள அரசு தமிழ்நாடு அரசுக்கு கடிதம் அனுப்பியது. எனினும் இதன் தொடர்ச்சியாக கேரள அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் பற்றிய முழுவிவரங்கள் வழங்கும்படி கேரள அரசிற்கு கடிதம் அனுப்பப்பட்டது. கேரள அரசு அணை கட்டும் திட்டத்திற்கான அனைத்து விவரங்களையும் தமிழ்நாட்டிற்கு இதுவரையில் அளிக்காததால், இதற்கான அனைத்து விவரங்களையும் கேரள அரசு அளிக்க உரிய அறிவுரை வழங்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 24.5.2017 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டு நடைமுறைக்கு வரும் வரையில் கேரள அரசு எவ்வித கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது என அறிவுறுத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 19.5 கேரள அரசு பவானி ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல்

அட்டப்பாடி பள்ளத்தாக்கிலுள்ள பவானி மற்றும் அதன் துணை நதிகளில் கேரள அரசு தடுப்பணைகள் கட்ட முயற்சிப்பதாக ஊடகங்களில் செய்திகள் வந்தன.

இது பற்றி உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு 01.02.2017 அன்று ஓர் மனுவை தாக்கல் செய்தது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 27.02.2017 அன்று அளித்த கோரிக்கை மனுவில் கேரளத்தில் உள்ள பாம்பாறு மற்றும் பவானி நதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்தி வைக்கும்படியும் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும் உச்சநீதிமன்ற வழக்குகள் முடிவுக்கு வரும் வரையிலும் எவ்வித புதிய பணிகளையும் மேற்கொள்ள வேண்டாம் என கேரள அரசுக்கு அறிவுரை வழங்கும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டின் மனு 21.03.2017 அன்று உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, கேரள வழக்கறிஞர், பவானி ஆற்றில் கேரள மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட நீர் அளவை பயன்படுத்தும் பொருட்டே கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தார். உச்ச நீதிமன்றம், அத்தகைய உறுதிமொழியை தமிழ்நாடு அரசுக்கு வழங்கும்படி ஆணையிட்டது. அதன்படி கேரள அரசு ஓர் உறுதிமொழியை அளித்தது. இதன் தொடர்ச்சியாக, கேரள அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் பற்றிய முழுவிவரங்களை வழங்கும்படி கேரள அரசிற்கு கடிதம் எழுதப்பட்டது.

மேலும், 24.05.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இதுபற்றி குறிப்பிட்டு ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்ட

திட்டங்கள் அல்லது கட்டப்பட்டு வருபவைகள் அல்லது உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டுமானங்கள் ஆகியவற்றுக்கான அனைத்து விவரங்களையும் கேரள அரசு அளிக்க வேண்டி அவ்வரசுக்கு அறிவுரை வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டு நடைமுறைக்கு வரும் வரையில் கேரள அரசு எவ்வித கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது என அறிவுறுத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**19.6 முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தை +152 அடி வரை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய எஞ்சிய பலப்படுத்தும் பணிகள்.**

மத்திய நீர்வளக் குழுமம் தெரிவித்து, வல்லுநர் குழு 2001ல் பரிந்துரைத்து, பின் 27.02.2006 அன்று உச்சநீதிமன்ற ஆணையின்படியும், பின்னர் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்டு, உச்ச நீதிமன்றத்தால் 7.5.2014 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படியும், பேபி அணையை பலப்படுத்துதல் மற்றும் கருவிகள் பொருத்துதல், மண் அணையை பலப்படுத்துதல், மண் குன்றை பாதுகாத்தல் (பிரதான அணை மற்றும் பேபி அணைக்கு இடையே உள்ள தீவின் முன்புறம்), பிரதான அணை மற்றும் வழிந்தோடி மதகுகளின் இடைப்பகுதி தீவின் பின்புறத்தில் கற்கள் பாவித்தல், பிரதான அணையின் மேற்புறத்தில் உள்ள கைப்பிடி சுவரை, மீதமுள்ள 20 மீட்டர் நீளத்திற்கு 158 அடியிலிருந்து, 160 அடி வரை உயர்த்துதல் ஆகிய எஞ்சிய பலப்படுத்தும் பணிகளை தமிழ்நாடு மேற்கொள்ள வேண்டும்.

பலப்படுத்தும் பணிகளுக்கான வரை படங்கள் (working drawings) மற்றும் குறிப்புகள் (specifications) தயாரிக்கப்பட்டுள்ளது. பேபி அணையில் கருவிகளை பொருத்துவதற்கு மத்திய நீர்வளக் குழுமத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. விரிவான மதிப்பீடு (detailed estimate) தயாரிக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண்.122 பொதுப்பணித் துறை, நாள் 16.06.2015 மூலம் 7.85 கோடி ரூபாய்க்கு பேபி அணையின் பின்புறம் கான்கிரிட் சுவர் அமைத்தல் (RCC Backing), பிரதான மற்றும் பேபி அணையில் கருவிகள் பொருத்துதல் மற்றும் இதர பலப்படுத்தும் பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகளை முடிக்க ஏதுவாக 8 பணிகளாக பிரிக்கப்பட்டு 17.7.2015 நாளில் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, வனவிலங்கு மற்றும் சுற்றுச்சூழல் துறைகளின் அனுமதி தேவைப்படாத 4 பணிகளுக்கு ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டு பணிகளை விரைவில் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கூறிய பணிகளில், பிரதான அணையின் (Main Dam) கைப்பிடிச் சுவரை 20மீ நீளத்திற்கு 158 அடியிலிருந்து 160 அடி வரை உயர்த்தும் பணி 08.04.2017 அன்று முடிவடைந்தது. பேபி அணையை பலப்படுத்த, 23 மரங்களை அகற்ற வேண்டியுள்ளது. இதற்கு வனவிலங்கு மற்றும் சுற்றுச்சூழல் துறைகளின் அனுமதி கோரி 29.05.2015 அன்று இணையதளம் வழியாக பதிவேற்றம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட துறையின் பரிசீலனையில் உள்ளன. இதன்பொருட்டு மத்திய அரசின் அனுமதியை பெறுவதற்காக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 27.02.2017 அன்று அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவில், மீதமுள்ள பணிகளை தமிழ்நாடு செய்து முடிப்பதற்கு தேவையான ஒப்புதல்களை விரைவில் அளிக்க கேரள அரசினை வலியுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசு 10.5.2017 அன்று மத்திய சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்துக்கும், கேரள அரசுக்கும் அனுப்பிய கடிதங்களில், வனத்துறையின் அனுமதியை விரைவில் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எஞ்சியுள்ள பணிகளை தமிழ்நாடு செய்து முடிப்பதற்கு கேரள அரசு ஒத்துழைப்பு அளிக்க வேண்டி, கேரள அரசு மற்றும் மத்திய அரசு ஆகியவற்றை தமிழ்நாடு அரசு தொடர்ந்து கேட்டுக்கொண்ட போதிலும் சாதகமான பதில் வரப்பெறாத நிலையில், தமிழ்நாடு அரசு ஒரு நிறைவேற்றல் மனுவை (Execution Petition) 01.03.2017 அன்று உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. இம்மனு, 4.5.2017 அன்று உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது, கேரள அரசுக்கு தாக்கீது அனுப்ப உத்தரவிட்டும், 2017, ஜூலை 2வது வாரத்தில் பட்டியலிடும்படியும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## 19.7. பாலாற்றின் குறுக்கே ஆந்திரப் பிரதேச அரசு அணை மற்றும் தடுப்பணைகள் கட்டுதல் குறித்த வழக்குகள்

சித்தூர் மாவட்டம், குப்பம் வட்டத்தில் உள்ள கணேசபுரத்தில் பாலாற்றின் குறுக்கே ஓர் அணையினை ஆந்திரப் பிரதேச அரசு கட்ட இருந்ததை தடுத்து நிறுத்த வேண்டி தமிழ்நாடு அரசு 10.02.2006 அன்று உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு (O.S. No. 2 of 2006) தாக்கல் செய்தது.

இவ்வழக்கில் தமிழ்நாட்டின் சாட்சியாளரிடம் நடத்தப்பட்ட குறுக்கு விசாரணை 20.01.2017 நிறைவுற்றது. ஆந்திரப் பிரதேச அரசின் சாட்சியாளரிடம் குறுக்கு விசாரணை நடக்க உள்ளது.

பாலாற்றின் குறுக்கே ஆந்திரப் பிரதேச அரசு, பெரும்பள்ளம் கிராமத்தில், சித்தூர் மாவட்டத்தில், ஆந்திர - தமிழ்நாடு எல்லைக்கு அருகில் அமைந்துள்ள தடுப்பணையின் உயரத்தை தன்னிச்சையாக 5 அடியிலிருந்து 12 அடி வரை உயர்த்தியுள்ளதாக அறியப்பட்டவுடன், 01.07.2016 அன்று ஆந்திர மாநில முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மேலும், மத்திய அரசு இப்பிரச்சனையில் உடனடியாக தலையிட்டு ஆந்திர அரசுக்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறு நீர் ஆதாரம், ஆற்று மேம்பாடு மற்றும் கங்கை புனரமைத்தல் அமைச்சகத்தை கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஆந்திரப் பிரதேச அரசிடமிருந்தோ அல்லது மத்திய அரசிடமிருந்தோ பதில் ஏதும் வரப்பெறாத நிலையில், தமிழ்நாடு அரசு, 18.07.2016 அன்று இப்பிரச்சினை குறித்த வழக்கு மற்றும் இடைக்கால மனுவினை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது (O.S.No.3/2016). இவ்வழக்கில், ஏற்கெனவே ஆந்திரப் பிரதேச அரசு உயர்த்திக் கட்டப்பட்டுள்ள

தடுப்பணைகளின் உயரத்தை பழைய நிலைக்கு கொண்டுவர வேண்டும் என்றும், கூடுதலாக நீரைத் தேக்கி வைக்கக் கூடாது என்றும், இயற்கையாக ஓடுகின்ற நீர் தமிழ்நாட்டிற்கு வருவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் மற்றும் புதிய தடுப்பணைகளை கட்டுவதும் சட்டத்திற்கு முரணானவை எனவும், மற்றும் இவைகள் தமிழ்நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகும் போன்ற கோரிக்கைகளை வைத்து அவைகளின் மீது உத்தரவு வழங்குமாறு உச்ச நீதிமன்றத்தை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசு, 03.03.2017 அன்று திருத்திய மனுவை (Amendment to Plaint) உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

இவ்வழக்கு உச்ச நீதிமன்றத்தில் 27.03.2017 அன்று விசாரணைக்கு வந்தது. ஆந்திரப் பிரதேச அரசு 6 வார காலத்தில் தனது பதில் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

**எடப்பாடி கே. பழனிசாமி**
**முதலமைச்சர்**